
## ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 ஐப்பசி மாதம்

# இந்து மத நெறியைப் போற்றுவோம் !
# வேற்று மத வெறியை மாற்றுவோம் !



இந்துக் கோயில்களில் பணிபுரியும் குரு, குருக்கள், குருமார், பூசாறி அனைவரும் ‘<u>அருட்பட்டங்கள்</u>’ பெற்ற ‘<u>அருட்கலைஞர்களாக</u>’ தயாரிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் இந்துக் கோயில்களில் மந்திரித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உருவாகும்; இந்துக்கள் மாற்று மதக் கோயில்களுக்குச் சென்று மந்திரித்துக் கொள்வது தடுக்கப்படும்.

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு.

43,73,125ஆம் ஆண்டின் ஐப்பசி மாத வெளியீடு.

தலைப்பு:- **“இந்துமத நெறியைப் போற்றுவோம்! வேற்றுமத வெறியை மாற்றுவோம்!”**

# உள்ளுறை

1. **“இ.ம.இ.யின் வளர்ச்சி பெற்ற நிலைதான் இ.மு.க.”** - இந்து முன்னேற்றக் கழகம் பற்றிய விளக்கங்களை வழங்கி, குருதேவர் காரைக்குடி அடியான் ஒருவருக்கு 24-09-1992இல் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
2. **“இந்து வேதம்: 3339”** - இந்துவேத வாசகம் ஒன்றை மக்களிடையில் விளக்கமாகப் பரப்புவதுதான் இந்து முன்னேற்றக் கழகத்தின் செயல்திட்டம் என்பதை விளக்கி குருதேவர் காரைக்குடி அடியான் ஒருவருக்கு எழுதிய அஞ்சல்.
3. **“ஞானாச்சாரியார் அவர்களின் 57வது பிறந்த நாள் அருட்செய்தி”** - இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாறியக் குருபீடக் குருதேவர் அவர்கள் தமது பிறந்த நாள் செய்தியாக வெளியிட்ட அருளாணைகள்.
4. **“அகத்தியர் அருட்கோட்டத்திற்கு வழங்கப்படும் சிறப்புக்கள்”** - காரைக்குடி அகத்தியர் அருட்கோட்டத்திற்கான செயல்திட்டங்களையும், எச்சரிக்கைகளையும் வழங்கி விடுக்கப்பட்ட அஞ்சல்.
5. **“குருதேவர் பிறந்தநாள் பற்றிய குறிப்பு”** - தாம் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை ஒன்றில் தமது பிறந்த நாள் பற்றி குருதேவர் வழங்கிய குறிப்பு.

# இ.ம.இ.யின் வளர்ச்சி பெற்ற நிலைதான் இ.மு.க.

24-09-1992

அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் சன்னிதானம், காரைக்குடி இ.ம.இ. அமைப்பாளர் கோ. சங்கர் குமார் பி.எஸ்.சி. அவர்கள் சமூகத்திற்கு,

தலைவர் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரின் திருவுளக் கருத்தறிந்து இ.ம.இ. - இ.மு.க. இணைப் பொதுச் செயலாளர், அருள்மிகு அண்டபேரண்டத்திலிருந்து வந்து அருளாட்சிக் கோலநாயகியாகி பத்துத் திருக்கைகளுடன் எழுந்தருளும் ஆத்தாள் தேவி குருமாரியம்மன் சன்னிதானம் சித்தரடியான் இரா. சீனிவாசன் (M.Com.) வரையும் பதில் திருவோலை.

1. நண்பரே! தோழரே! தொண்டரே! சித்தரடியாரே! செயல்வீரமிகு வீர இளைஞ! கோ. சங்கர்குமார் அவர்களே! தாங்கள் காரைக்குடியிலிருந்து 19.9.92 தேதியிட்ட பொன்னேரி முகவரிக்கு எழுதிய நெஞ்சம் திறந்த அஞ்சல் குருபீடத்திற்குப் படித்துக் காட்டப்பட்டது. குருபீடம் மிகவும் மகிழ்ந்தது. தங்களுடைய அஞ்சலை தமது திருக்கரத்தில் வாங்கி ஒருமுறை படித்துப் பார்த்தது. அதன் விளைவாக, ஓரிரு இடங்களில் கோடிட்டு தங்கள் தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டன. அதை முதலில் இங்கு குறிப்பிட்டு அஞ்சலைத் தொடருகிறோம்.

2. தவறு சிறியதாக இருக்கும் போதே திருத்திக் கொள்ள வேண்டும். உங்கள் தவறுகளை சுட்டிக் காட்டுவதால் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர வருத்தப் பட்டுவிடக் கூடாது,

புண்பட்டு விடக் கூடாது. மேலும், தாங்கள் நமது நிறுவன நிர்வாகங்களில் முன்னணிப் பொறுப்பில் இருக்கின்ற ஒருவர். எனவே, தங்களால் எந்தத் தவறும் செய்யப் பட்டுவிடக் கூடாது. **<u>எச்சரிக்கை அறிவிப்பு இது</u>**.

3. தாங்கள் எம்மை அஞ்சல் உறையில் 'இ.ம.இ. இனைச் செயலாளர்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

- இ.ம.இ. என்று ஒன்று இருக்கிறது. மற்றொன்று இ.மு.க. என்று இருக்கிறது.
- இணை என்ற இடத்தில் 'ட'ண்ணகரத்திற்குரிய 'ண' எழுதப்பட வேண்டும். ஆனால் தாங்கள் 'ற'ன்னகரத்திற்குரிய 'ன' எழுதியிருக்கிறீர்கள்.

**<u>குறிப்பு</u>:-** இவை சிறிய தவறுகள்தான். ஆனால், மிகப்பெரிய தவறுகளை விளைவிக்கக் கூடியது. எனவேதான், குருபீடம் கண்டித்திருக்கிறது.

4. தாங்கள் அஞ்சலுக்குள் 'நண்பர் இ.ம.இ. செயலாளர் திரு சீனிவாசன்' என்று குறித்திருக்கிறீர்கள்.

- நான் இ.ம.இ., இ.மு.க. என்ற இரண்டு அமைப்புக்கும் சேர்த்து நியமிக்கப்பட்டிருக்கும் இணைச் செயலாளர். எனவே, இ.ம.இ.யை மட்டும் குறிக்க வேண்டாம்.
- என்னைச் செயலாளர் என்று குறித்திருக்கிறீர்கள். நான் செயலாளரல்ல, இணைச் செயலாளர்.

5. தாங்கள் அஞ்சலில் இ.ம.இ. பசும்பொன் மாவட்டத் தலைவர் திரு இராமானுசதாசு என்று குறித்திருக்கிறீர்கள். இவர் பசும்பொன்னார் மாவட்டத்து இ.மு.க. தலைவர். இ.ம.இ.க்கு அல்ல. இது தவறு. இதற்காக தாங்கள் வன்மையாகக் கண்டிக்கப்படுகிறீர்கள்.

6. தாங்கள் இ.மு.க.வைச் சேர்ந்த இராமானுசதாசு, இ.ம.இ. நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை என்று வருந்தியிருக்கிறீர்கள்.

இ.மு.க. தலைவர் என்பவர் இராணுவ உடையில் ஆயுதம் தாங்கி போர்க்களத்தில் போர் புரியும் இராணுவத் தளபதி போன்றவர். அவரை போர்க்களத்தை விட்டுவிட்டு ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு போர்க்கோலத்தை மாற்றிக் கொண்டு வயல்வெளிக்கு வந்து உழுது நாற்று நடும் விவசாயப் பணிகளைக் கவனிக்கும் விவசாயியாகச் செயல்படச் சொல்லுகிறீர்கள் அல்லது எதிர்பார்க்கிறீர்கள் என்றுதான் பொருள். அதாவது இ.ம.இ. என்பது இந்துமத விதைகளையும், நாற்றுக்களையும் மீண்டும் மக்களின் மனதில் உழுது விதைத்தும், நாற்று நட்டும் அருட்பயிர் வளர்க்கும் விவசாய வேலையைச் செய்வதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். இ.மு.க. என்பது சமுதாய அளவிலும், அரசியல் அளவிலும் இந்துவேத இந்துமத உரிமைகளைக் காக்க போரிடுவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இந்த இரண்டு வகைப் பணிகளுமே தேவை, தேவை, தேவை. ஆனால், இ.ம.இ., இ.ம.இ.யாகத்தான் செயல்பட வேண்டும்; இ.மு.க., இ.மு.க.வாகத்தான் செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் வெற்றி பெறுவோம்.

7. <u>இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள் கண்டிப்பாக வேட்டி, சட்டை, துண்டு கண்டிப்பாக சிவப்பில் இருக்க வேண்டும். அல்லது வேட்டி, இடுப்புக் கச்சை, தலைப்பாகை சிவப்பாக இருக்க வேண்டும். கண்டிப்பாக மணிக்கட்டிலும், கழுத்திலும் உருத்திராக்கம் இருக்க வேண்டும். கண்டிப்பாக கையில் திரிசூலம் அல்லது மயில் பீலி அல்லது மெய்ஞ்ஞானக் கொடி இருக்க வேண்டும். கைகளில் மக்களுக்கு வழங்க திருநீறு, குங்குமம், அச்சிட்ட அறிக்கைகள், புத்தகங்கள் வைத்திருக்க வேண்டும். இதுதான் இ.ம.இ.யின் தலைவர், தொண்டர் ஆகியோரின் திருத்தோற்றம்</u>. இந்தத் திருத்தோற்றம்தான் இந்து வேதத்தை, இந்துவேதக் கோயில்களை, இந்துவேத நூல்களை, இந்துமத நூல்களை, இந்துமத வரலாறுகளை, இந்துமத அருளாளர்களை,

இந்துமத நடைமுறைகளை, இந்துமதத் திருநாள்களை, இந்துமதத் திருவிழாக்களை, இந்துமதச் சடங்குகளை பகுத்தறிவுப்பூர்வமான மறுமலர்ச்சி அடையச் செய்யும். எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.

8. இந்த இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள்தான் அருட்கோட்டங்களை வைத்து யாகம் செய்தும், பரிகாரப் பூசைகள் செய்தும்; கோயில்களில் வாரவழிபாட்டு மன்றங்கள், திருவிளக்குப் பூசைகள், சந்தனக் காப்பு விழாக்கள், அருட்கணிப்புச் செய்தல், அருள்வாக்கு கூறுதல், சோதிடம், குறி, சாதகம், கைரேகை, பரிகாரம், ... முதலியவைகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்வதன் மூலமும் இந்துமத உணர்வையும், நம்பிக்கையையும், பற்றையும் மறுமலர்ச்சியடையச் செய்திடுவார்கள். இதற்காக பாதிப்பாளர்கள், நோயாளிகள், பேயாளிகள், பரிகாரத்திற்கு வருபவர்கள் முதலியவர்களின் இல்லங்களில் திரைச் சீலைகளாகவும், பூசையறை ஓவியமாகவும், வீட்டு வாசலில் கம்பம் நட்டுப் பறக்க விடும் ஓவியமாகவும், வீட்டு வாசலில் மெய்ஞ்ஞானக் கொடியாகவும் சிவலிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டாக வேண்டும். இதுபோல், ஊர்ப் பொது இடங்களிலும், கோயில் வளாகங்களிலும், நாம் உண்டாக்கும் அருட்கோட்டங்களிலும், ஊரின் நுழைவாயில்களில் உள்ள உயரமான பசுமை மிக்க மரங்களின் உச்சியிலும் மெய்ஞ்ஞானக் கொடிகளைப் பறக்க விட வேண்டும். அப்பொழுதுதான், இந்துவேத மறுமலர்ச்சியும், இந்துமத மறுமலர்ச்சியும் ஏற்பட்டிடும். தனிமனித உள்ளங்களிலும், குடும்ப வாயில்களிலும், கோயில் மன்றங்களிலும் இந்துவேதப் பூசைமொழிகள் உரக்க ஒலித்திடும். இந்துமத வாழ்வு செழிப்பு மிக்க ஆட்சிமாட்சி மீட்சி பெற்றிடும். அதன் பிறகுதான், இந்து சமுதாயத்தையும், அரசியலையும் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

9. அதாவது நண்பரே! மேலே கூறியவைகளின் படி இந்து மறுமலர்ச்சி இயக்கம்தான் தனிமனிதர்களையும், குடும்பங்களையும் இந்துக்களாக மாற்றிடும், மாற்றிடும், மாற்றிடும். எனவே, **பிறப்பால்**

**<u>மட்டும்</u>** இந்துக்களாக இருப்பவர்களே இந்து வேத நூல்களே ஓதவும், இந்து மத நூல்களின் படி வாழவும் செய்திட்டால்தான்; இந்துக்கள் நாட்டில் மிகுந்திடுவார்கள். அதாவது, **<u>இ.ம.இ. பெயரளவில் இந்துக்களாக வாழ்கிறவர்களே மெய்யான இந்துக்களாக, தேவையான அளவு ஏட்டறிவும், பட்டறிவும் உடையவர்களாக ஆக்கிடும்.</u>** இம் மாபெரும் பணி இ.ம.இ. எனும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்திடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனல், ஆனல், ஆனல், இ.ம.இ.யை இப்படித் திறம்படச் செயல்படுத்தாமல் இரண்டு மூன்று தனிமனிதர்கள் மட்டும் குறி சொல்பவர்களாக, பேயோட்டுபவர்களாக, அருட்கணிப்பு கணிப்பவர்களாக, யாகம் செய்பவர்களாக, முடிகயிறு தாயத்து சக்கரங்கள் வழங்குபவர்களாக மட்டுமே வாழ்ந்திட்டார்கள், வாழ்ந்திட்டார்கள், வாழ்ந்திட்டார்கள். அந்த நிலைமை பசும்பொன் மாவட்டத்தில் தொடர்ந்து நீடித்திட இராமானுசதாசுதான் காரணமாக இருந்தார், இருந்தார், இருந்தார். எனவேதான், அவர் இ.ம.இ.யை விட்டு முழுக்க நீக்கப்பட்டு விட்டார், தடுக்கப்பட்டு விட்டார். அவருடைய பழமையான, பயனற்ற, வளர்ச்சியற்ற நோக்கும் போக்கும் இன்றைய இ.ம.இ.யினருக்கு வந்துவிடக் கூடாது, வந்துவிடக் கூடாது, வந்துவிடக் கூடாது. **<u>எச்சரிக்கை</u>**.

10. அன்பு நண்பரே! மு. இராமானுசதாசு இ.ம.இ.யை உண்மையாலுமே வளர்த்திருந்தால் இ.ம.இ.யின் வளர்ச்சி பெற்ற நிலைதான் இ.மு.க. என்பதைப் புரிந்திருப்பார். **<u>இ.ம.இ.யின் வளர்ச்சி பெற்ற நிலைதான் இ.மு.க.</u>** என்பதுதான் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் வாக்கு. இதன்படிதான், மு. இராமானுசதாசு அவர்களுக்கு அவர் வளர்த்த இ.ம.இ.யைப் பயன்படுத்தி இ.மு.க. வளர்க்கும்படி அருளாணையிட்டு; இ.மு.க.வின் பசும்பொன்னர் மாவட்டத் தலைமைப் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. இனிமேல், அவர் உலகியலாக, ஒரு பேராசிரியர் போல் உடையுடுத்தி, இ.மு.க.வின் நிகழ்ச்சிகளில் கலந்து

கொள்ளும் போது மட்டும்; சிவப்புத் துண்டோ அல்லது சிவப்புச் சட்டையோ பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று சிறப்பு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது.

**குறிப்பு:-** இவரைப் போல், இ.ம.இ.யைச் சரியாக வளர்க்காமலும், தாமும் சரியாக வளராமலும் செயல்பட்ட மேற்கு மண்டல இ.ம.இ. தலைவர் இர. கங்காதரக்குமார் அவர்கள் **'இனிமேல் சிவப்பு ஆடை அணியக் கூடாது, சன்னிதான உடை உடுக்கக் கூடாது, யாருக்கும் மந்திரிக்கக் கூடாது, எந்த இ.ம.இ. நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக் கூடாது'** என்று கடுமையாகத் தடைவிதித்து அவரை இ.மு.க.வின் தலைவராக மட்டும் நியமித்திருக்கிறது குருபீடம். இதைப் புரிந்து செயல்படுக. மேலும், இவரைப் போலவே செயல்பட்டிட்ட மேற்கு மண்டல மாதண்ட நாயகம் பழ. கோபால் என்பவர் இ.ம.இ.யை விட்டே விலக்கப் பட்டு இ.ம.இ., இ.மு.க. எந்த அமைப்பிலுமே செயல்படக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதேபோல், மேற்கு மண்டல அருட்பணி விரிவாக்கத் திட்ட நாயகமாகச் செயல்பட்டிட்ட இரா. இராசசேகரன் சரியாகச் செயல்படவில்லை என்பதனால், இ.ம.இ., இ.மு.க. என்ற இரண்டு நிறுவனங்களிலுமே எந்த வகையிலும் ஈடுபடக் கூடாது என்று தடை விதிக்கப் பட்டிருக்கிறது. இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்தாவது இனிமேலும் மு. இராமானுசதாசு அவர்கள் இ.ம.இ. நிகழ்ச்சிகளுக்கு உற்ற துணையாக செயல்பட வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது, குறைபட்டுக் கொள்ளக் கூடாது. **எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை**. இதைப் புரிந்து செயல்படுக!

11. அன்பு நண்பரே! தாங்கள் சந்தனக் காப்பு விழா பற்றி எழுதியிருந்தீர்கள். ஆனால், யார் யார் சந்தனக் காப்பு விழாவில் பேசினார்கள் என்பது பற்றி எழுத வில்லை. ஏன்? ஏன்? ஏன்? இது மிகப்பெரிய குறை. தாங்கள் அமைப்பாளர். எனவே, சந்தனக்

காப்பு பற்றி மிகத் தெளிவாக ஆரம்பம் முதல் இறுதிவரை எழுதுக, எழுதுக, எழுதுக.

12. இ.ம.இ. நிகழ்ச்சிகளாக சந்தனக் காப்பு, யாகபூசை, வள்ளலார் மன்றத் துவக்க விழா, அருணகிரியார், தாயுமானவர், பட்டினத்தார், 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள் முதலியவர்களின் பெயரால் பசனை மடம், பத்தர் சங்கம், பாத யாத்திரைக் குழு, கூட்டு வழிபாட்டுத் திருச்சபை, அருள்நெறிக் கழகம், அனுதிசங்கராச்சாரியார் உழவாரப் பணி மன்றம், கிருபானந்தவாரியார் கிருத்திகைக் கழகம் மற்றும் பணிமன்றம், ஐயப்ப பத்தர்கள் குழு, ... என்பனவற்றின் பெயரால் ஒவ்வொரு கோயிலிலும் ஏதேனும் திருவிழாவை நிகழ்த்தி ஒலிபெருக்கி வைத்து மேடைப் பேச்சுக்கள் பேச வேண்டும். பொதுமேடையில் பேசுவதற்கு, இ.ம.இ.யைச் சார்ந்தவர்கள் சன்னிதான உடையில் வரவேண்டும். இ.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இ.மு.க. உடையில் நேராக மேடைக்குத்தான் வரவேண்டும். பூசையில் கலந்து கொள்ளக் கூடாது.

<u>இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள்</u>:-

- **இந்து வேதம், இந்து மதம்,**
- **பூசை,**
- **மொழி,**
- **அருட்பணி,**
- **இந்து மதக் கலைகள்,**
- **பல கடவுள்கள் உண்டு என்ற கொள்கை,**
- **தமிழ்மொழியே அருளாட்சி மொழி,**
- **அறிவிக்கை எண்கள் 7777, 6666, 9999, 3332, 2222, 11111**

முதலியவைகளை மட்டுமே பேச வேண்டும்.

இ.மு.க.வினர்:-

- சமுதாயப் புரட்சி, அரசியல் புரட்சி, பண்பாட்டுப் புரட்சி, நாகரிகப் புரட்சி, கலைப் புரட்சி;
- கோயில் நிர்வாகம், அருட்சகர் நிர்வாகம், கோயில் சொத்து;
- மாற்று மதமும் இந்து மதமும் பற்றிய இந்திய அரசியல் சட்டங்கள்;
- மத வரலாறுகள்;
- பதினெண்சித்தர்கள்;
- இன்றைய கல்வியும் இந்து மதமும்;
- கல்வித்துறையில் இந்து மதம்;
- கலைத் துறையில் இந்து மதம்;
- புத்தம், சமணம், பிருமணம், கிறித்தவம், இசுலாம் பற்றிய விளக்கங்கள்;
- ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி, வி.எச்.பி. முதலியவற்றின் போலி நிலைகள்;
- இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் மடம்;
- இந்து வேதமும், இந்து மதமும்தான் இந்தியாவை ஒற்றுமைப்-படுத்தும்;
- இந்து மத அருளாளர்களும், சாதனைகளும், போதனைகளும்;
- பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு அமைத்தல்;
- தமிழ்மொழிதான் அருளாட்சி மொழி;
- தமிழ்ப்புலவர்களின் தன்னம்பிக்கையும், ஒற்றுமையுமே இந்துக்களுக்கு விழிச்சியையும், எழிச்சியையும், செழிச்சியையும் தரும்;
- சித்தர் இராமாயணம், சித்தர் பாரதம்;
- சங்க இலக்கியங்கள், பதினெண் மேல் கணக்கு நூல்கள், பதினெண் மையக் கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்;
- 64 திருவிளையாடல்கள்;
- 63 நாயன்மார் 12 ஆழ்வார்கள் வாழ்க்கை வரலாற்று விளக்கங்கள்;

- ❋ **சமயக்குரவர்கள், சந்தானக் குரவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள்;**
- ❋ **இந்து மத விழாக்களின் அருமை பெருமைகள், அரிய பயன்கள்;**
- ❋ **இந்து மதத்தில் உள்ள சித்து விளையாடல்காரர்கள், சாமியார்கள், பூசாறிகள், குறிகாரர்கள் முதலியவர்களை ஒன்றுதிரட்டுதல்;**
- ❋ **இந்திய விடுதலை வரலாற்றுத் தலைவர்கள் முதல் இன்றுள்ள இந்திய அரசியல் தலைவர்கள் வரை நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர் இந்துமதத் துரோகிகளே, விரோதிகளே, அந்நிய நாட்டு மதங்களின் கைக்கூலிகளே, கங்காணிகளே;**
- ❋ **இந்து மத அரசியல் இந்து மதத்தின் வளர்ச்சியை தடுத்தும் கெடுத்தும் வருகிறது;**
- ❋ **இந்தியாவை இந்து மதம்தான் ஆளவேண்டும்;**
- ❋ **இந்து மதம் வேறு, ஹிந்து மதம் வேறு;**

... இதுபோன்ற தலைப்புக்களில் <u>இ.மு.க.வினர் சுவையாகப் பேசலாம், சூடாகப் பேசலாம், சுறுசுறுப்பாகப் பேசலாம், புரட்சியாகப் பேசலாம், புதுமையாகப் பேசலாம்</u>.

குறிப்பாக,

1. இலக்கியச் சொற்பொழிவுகள்,
2. இலக்கியக் கருத்தரங்குகள்,
3. இலக்கியப் பட்டிமன்றங்கள்,
4. கவிதை அரங்கேற்றங்கள்,
5. கட்டுரைப் போட்டிகள்,
6. தமிழ்ப் புலவர் பேரவை,
7. பணியிலிருந்து ஓய்வு பெற்ற முதியோர் பேரவை,
8. கல்வி பயிலும் மாணவ மாணவியர் பேரவை,
9. படிக்காத, படித்து முடித்த இளைஞர் பேரவை,
10. இந்து மகளிர் பேரவை,
11. கோயில் பாதுகாப்புப் பேரவை,
12. ஓகாசன யோகாசன மன்றங்கள்,

13. இந்து வேத தேவ விளக்கக் கூட்டங்கள்,

14. இந்து வேத மாநாடுகள்,

15. இந்து மத மாநாடுகள்,

... என்றிப்படி எண்ணற்ற செயல்திட்டங்கள், நிறுவன நிர்வாகங்கள், மக்களை ஒன்றுதிரட்டும் நிகழ்ச்சிகள், செயல்திட்டங்கள், பேசுகின்ற தலைப்புக்கள் இ.மு.க.விற்காக ஏராளமாக உள்ளன, உள்ளன, உள்ளன. எனவே, இ.மு.க.வினர் இ.மு.க.வினராகவே பேசட்டும், செயல்படட்டும். எக்காரணத்தை முன்னிட்டும் இ.மு.க.வினர் இ.ம.இ.யினராகப் பேசத் தேவையில்லை, செயல்படத் தேவையில்லை.

13. பசும்பொன்னூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் என்றுள்ள யாருமே இன்று வரை தலைமைப் பீடத்திலிருந்து வரக்கூடிய எந்தக் கடிதத்துக்கும் இயந்திர நகல்களோ (Photostat Copies or Xerox copies), கையெழுத்துப் பிறதி நகல்களோ (Manuscript copies) அனுப்பவில்லை, அனுப்பவில்லை, அனுப்பவில்லை, அனுப்பவே இல்லை. இந்தக் குறை உங்களின் மூலமாவது உடனே நீங்க வேண்டும். இதற்குரிய முயற்சியை பசும்பொன்னூர் மாவட்ட நிர்வாகக் குழுவில் உள்ள ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து ஆவன செய்யுங்கள்.

**குறிப்பு:-** இந்த அஞ்சலுக்கும், இதனோடு வருகின்ற **‘இந்துவேதச் சிந்தனைகள்’** என்ற கட்டுரைக்கும் அவசர அவசியமாக உடனே நான்கு நகல்கள் அம்பத்தூர் பதினெண்சித்தர் பீடத்திற்கும், இரண்டு நகல்கள் பொன்னேரி பதினெண்சித்தர் மட அலுவலகத்திற்கும் அவசர அவசியமாக அனுப்புங்கள். இராமானுசதாசு, பூபதி, சோலைமலை, குருசாமி, ஐயப்பன், முருகேசன், இரவீந்திரநாத், வேதநாயகம், கணபதி, திருவேங்கடம் முதலிய ஒவ்வொருவரையும் சந்தித்து ஒவ்வொருவரிடமும் எத்தனை அஞ்சல்கள் இருக்கின்றன? என்னென்ன தேதிகளில் என்னென்ன தலைப்புகளில் வந்துள்ளன? என்ற விவரங்களை

எழுதுங்கள். இ.ம.இ. பற்றிய அஞ்சல்களை நீங்கள் கூடி முடிவெடுக்கும் யாராவது ஒருவர் வீட்டில், இ.ம.இ. அலுவலகத்தில் அஞ்சல்களைத் தொகுத்து வையுங்கள் அல்லது அஞ்சல்களின் நகல்களைத் தொகுத்து வையுங்கள். உடனடியாக ஒரு மாணவரையோ அல்லது வேலையில்லாத இளைஞரையோ இ.ம.இ. அலுவலகத்தில் நகலெடுப்பதற்காக வேலையில் வையுங்கள். இதேபோல், இ.மு.க. தலைவர் இராமானுசதாசு வீட்டு மாடியில் இ.மு.க. அலுவலகம் வைத்து, இ.மு.க. தொடர்பான அஞ்சல்களைத் தொகுக்கவும், நகலெடுத்து வைக்கவும் முயலுங்கள்.

**குறிப்பு:-** ஒவ்வொரு மாவட்டத்தையும் நிர்வகிக்கும் (அ.வி.தி.) அருட்பணி விரிவாக்கத் திட்ட நிர்வாகக் குழுவின் பசும்பொன்னூர் மாவட்ட அமைப்பாளர் நீங்கள் என்பதால்தான் இந்தப் பொறுப்புக்கள் அனைத்தும் உங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

14. அ.வி.தி. நிர்வாகக் குழுவில் பன்னிரண்டு (12) பேர்கள் நிர்வாகக் குழு உறுப்பினராக இருப்பது போல்; அருட்போருக்காகவும், அருளாட்சிப் பணிக்காகவும் இந்த அ.வி.தி. நிர்வாகக் குழுவின் கீழ் இ.ம.இ.க்கு நான்கு நிர்வாகக் குழுக்களும், இ.மு.க.விற்கு நான்கு நிர்வாகக் குழுக்களும் உடனடியாக அவசர அவசியமாக உருவாக்கப்பட்டேயாக வேண்டும் என்பது அருளாட்சி நாயகத்தின் அருளாணை. **எச்சரிக்கை**. எனவே, உடனடியாக பசும்பொன்னூர் மாவட்ட அ.வி.தி. நிர்வாகக் குழுவைக் கூட்டுங்கள். அதன்கீழ்,

1. இ.ம.இ. நிர்வாகக் குழு,
2. இ.ம.இ. மகளிர் அணி நிர்வாகக் குழு,
3. இ.ம.இ. மாணவர் அணி நிர்வாகக் குழு,
4. இ.ம.இ. இளைஞர் அணி நிர்வாகக் குழு,
5. இ.மு.க. நிர்வாகக் குழு,
6. இ.மு.க. மகளிர் அணி நிர்வாகக் குழு,
7. இ.மு.க. மாணவர் அணி நிர்வாகக் குழு,

8. இ.மு.க. இளைஞர் அணி நிர்வாகக் குழு,
என்று எட்டு நிர்வாகக் குழுவையும் உருவாக்குங்கள்.

**குறிப்பு:-** பள்ளியிலோ, கல்லூரியிலோ படித்துக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே மாணவர் அணியிலும், மாணவர் அணி நிர்வாகக் குழுவிலும் இருக்க வேண்டும். படித்து முடித்து விட்ட இளைஞர்களும், படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்ட இளைஞர்களும், படிக்காத இளைஞர்களும் பொதுவாக இளைஞர் அணி நிர்வாகக் குழுவில் இருக்க வேண்டும். இந்த வேறுபாட்டைத் தெளிவாக உணர்ந்து செயல்படுத்துங்கள்.

15. ஒவ்வொரு மாவட்டத்திலும், தேவையானால் வட்டாரத்திலும், வட்டத்திலும் அ.வி.தி. நிர்வாகக் குழுவையும் சேர்த்து மொத்தம் ஒன்பது நிர்வாகக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டேயாக வேண்டும். எனவே, குறைந்தது ஒவ்வொரு வட்டத்திலும், மாவட்டத்திலும் (தேவைக்கேற்ப ஒவ்வொரு வட்டத்திலும், வட்டாரத்திலும் 12 x 9 = 108) நூற்றியெட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கிடைப்பார்கள். அந்தக் காலத்தில் கி.பி. 785இல் இதுபோல் ஒவ்வொரு கூற்றத்திற்கும், நாட்டிற்கும் (108) நூற்றியெட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்களை உண்டாக்கித்தான் அருட்போர் புரிந்து அருளாட்சி அமைத்தார் நமது தஞ்சைத் தாத்தா அருளாட்சி நாயகம் அவர்கள். எனவே, மிக விரைவில் பசும்பொன்னூர் மாவட்டத்தில் 108 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பட்டியல் தலைமைப்பீடத்திற்கு வந்தேயாக வேண்டும். இதற்காக அ.வி.தி. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிரண்டு வாரங்கள் அதிக நேரத்தை இ.ம.இ., இ.மு.க. பணிக்காக ஒதுக்குங்கள் அல்லது செலவிடுங்கள்.

16. **இ.ம.இ. செயல்திட்டம்:**

அருட்போர் ஆரம்பமாகி விட்டதால், நம்மவர்களில் சொந்த இடம் உள்ளவர்களின் இடங்களில் குறைந்தது, 2, 4, 8 என்று

மூன்று அளவுகளில் தென்னை மரம் நட்டாக வேண்டும். அதற்குரிய கற்பகச் சக்கரம் தென்னை மரம் ஊன்றிய பிறகு தெரிவித்தால் 8 அல்லது 18 நாட்கள் கழித்து அனுப்பப்படும். (எத்தனைச் சக்கரங்கள் வேண்டுமென்று தெரிவிக்க வேண்டும்). இதேபோல் 4, 8, 16 என்று மூன்று அளவுகளில் இடுப்பளவு உயரமுள்ள முருங்கைக் கொம்புகள் கொண்டு வந்து நட்டு தண்ணீர் ஊற்றிப் பயிராக்க வேண்டும். இவை தழைத்தவுடன் முனீசுவரர் சக்கரம் அனுப்பி வைக்கப்படும். உடனடியாக இராமானுசதாசுவின் யாகசாலையிலும், பூபதியின் யாகசாலையிலும், ஐயப்பன் யாகசாலையிலும் தென்னைமரங்களும், முருங்கை மரங்களும் நட்டு வைக்க முயற்சி செய்யுங்கள். பசும்பொன்னர் மாவட்டத்தில் உள்ள பல ஊர்களிலும் இதுபோல் அருட்போர் பாசறைகளை உருவாக்குங்கள்.

17. இதுவரை தாங்கள் பொதுமக்களுக்கு வழங்குவதற்காகவும், சுவற்றில் ஒட்டுவதற்காகவும் அடித்து வைத்துள்ள அறிக்கைகளிலிருந்தும், சுவரொட்டிகளிலிருந்தும் கணிசமான அளவு அம்பத்தூர் தலைமைப்பீடத்திற்கும், பொன்னேரி பதிவு செய்யப்பட்ட சித்தர் பீட அலுவலகத்திற்கும் அனுப்பி வையுங்கள்.

18. இத்துடன் அனுப்பப்படும் 'இந்து வேதச் சிந்தனைகள்' என்ற கட்டுரையை எப்பாடுபட்டாவது பலரிடம் நன்கொடை பெற்று 1/8 அளவு, சாதாரண சினிமா பாட்டுப் புத்தக அளவில் மிகக் குறைந்த விலைக்கு அச்சிட்டு; காரைக்குடி தேவகோட்டை வட்டாரத்தில் உள்ள பத்தியுணர்வு மிக்க பெருமக்களிடம் வீடுவீடாகச் சென்று கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொல்லி நமக்கு ஆதரவு திரட்டுங்கள். முடிந்தால் இராமேசுவரம் முதல் கன்னியாகுமரி முனை வரை தங்களுக்குத் தெரிந்த கோயில் சார்ந்த பத்தர்களுக்கும், பத்தியுணர்வுள்ள தமிழாசிரியர்களுக்கும், தமிழ்மேடைப் பேச்சாளர்களுக்கும், ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., இந்து முன்னணியினருக்கும் வழங்குங்கள், வழங்குங்கள், வழங்குங்கள்.

19. அந்நிய மதங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கில் பணம் வருவது போல் நமக்கு வராவிட்டாலும், நம் நாட்டில் பத்தியுணர்வுள்ள பணக்காரர்கள் சிலர் நமக்கு உதவி செய்ய முன்வந்தாலும் போதும். நாம் மிகப் பெரிய சாதனைகளைச் சாதிக்க முடியும். இதை உணர்ந்து செயல்பட முற்படுங்கள்.

20. தங்களுக்காக எழுதப்படும் இந்த 11 பக்க அஞ்சலையும், இத்துடன் அனுப்பப்படும் 8¼ பக்க அளவுள்ள 'இந்துவேதச் சிந்தனைகள்' என்ற அஞ்சலையும் அவசர அவசியமாக உடனடியாக தஞ்சாவூருக்கு எடுத்துச் சென்று கிழக்கு மண்டலச் சிறப்பு அமைப்பாளரிடம் படித்துக் காட்டி; அவரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்து காரைக்குடி நிர்வாகக் குழுவைக் கூட்டி அனைவருக்கும் படித்துக் காட்டி; புதியதோர் செயலாக்கத்தை உருவாக்குங்கள், உருவாக்குங்கள், உருவாக்குங்கள். உங்களிடமிருந்து மிக விரைவில் விரிவான செயலாக்க விளக்க மடல் எதிர்பார்க்கின்றோம்.

**அன்பு**
**இ.ம.இ. - இ.மு.க. இணைச் செயலாளர்,**
**இரா. சீனிவாசன்.**

**<u>குறிப்பு</u>:-** இந்த இரண்டு அஞ்சல்களுக்கும் விரைந்து சில நகல்கள் அனுப்புக.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டச்சு செய்த நகலாகக் கிடைத்தது.//**

# இந்துவேதம்: 3339

*{குருதேவர் அவர்களின் Letter padஇல் எழுதப்பட்ட அஞ்சல்}*

பொன்னேரி,
29-10-92.

பெறுநர்:-

அருள்மிகு மதுரை மீனுட்சியம்மன் சன்னிதானம் சங்கர்குமார்,
29/7, அலர்மேலு அகம்,
M.V. சாலே, காரைக்குடி.

1. அன்பு மகனே! மிகக் குறுகிய காலத்தில் உன்னுடைய முன்வினேப் பயன்களாலும், விதியின் வலிமையாலும் குருபீடத்தின் நினேவு எல்லேக்குள் வெகு வேகமாக நுழைந்து விட்டாய். உன்னுடைய உழைப்பு அருளுலக அழைப்பின் பேரால் நிகழுகின்ற ஒன்ருகவே இருக்கின்றது. உன்னேடு நேரில் நிறைய செய்திகள் பேச வேண்டியிருக்கிறது. உன்னுடைய பெற்ரேர்கள், தாயின் உடன் பிறந்தார், தந்தையின் உடன்பிறந்தார், உன்னுடன் பிறந்தார் இவர்களின் பெயர், வயது, பிறப்பிடம், தொழில், இன்றைய நிலே, ... முதலியவை பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்ருேம்.

2. உன்னுடைய வயது, மனேவி, மனேவியின் உடன் பிறந்தார், மனேவியின் தாய், தந்தையர், அவர்களின் இருப்பிடங்கள், சொந்த ஊர், வாழுகின்ற ஊர், தொழில், ... முதலிய விவரங்கள் தேவை.

3. உனக்கு இதுவரை கொடுக்கப் பட்டிருக்கின்ற அருட்பட்டங்கள் விவரம், கனவு நிலேகள், நனவு நிலேகள், தீட்சை பெற்றுக் கொள்ளத் தயாரா? ஓகாசன யோகாசனப் பயிற்சிகள் செய்ய

முடியுமா? அன்றுடம் சிறிது நேரமாவது பூசை செய்ய முடியுமா? உன்ஞல் அனைவருடனும் விட்டுக் கொடுத்து ஒத்துப் போய்ப் பழகிட முடியுமா? உனக்குள் தன்னல வெறியோ, அகம்பாவமோ, ஆணவமோ, தானென்ற வம்பு, வீம்போ இல்லாமல் அருட்போர்ப் பணியும், அருளாட்சிப் பணியும் ஆற்றிட முடியுமா? பேருண்மைகளை மறையாகக் காத்தல் (இரகசியங்களைக் காத்தல் = maintenance of secrecy) எனும் பண்பை வளர்த்துக் கொண்டு காரைக்குடியிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் சுமார் 10, 15 சுற்றளவிற்குள் உள்ள எல்லா கோயில்களுக்கும் நம்மவரில் ஒருவர் இருவரையாவது துணைக்கு வைத்துக் கொண்டு ஒருசில புதியவர்களை அவ்வப்போது உருவாக்கிக் கொண்டு எல்லாவகைப்பட்ட கோயில்களுக்கும் புத்துயிர் ஊட்ட முடியுமா? அருளுலக விழிச்சி, எழிச்சி, செழிச்சி உண்டாக்க முடியுமா? ... இந்த விஞக்களுக்கெல்லாம் நீள நினைத்து (having a long thinking or a lengthy thinking or a prolonged thinking or a continuous thinking); ஆழச் சிந்தித்து (a deep thinking) வேகமான பதில் ஒன்று இரண்டு என்று எண்ணிக்கையிட்டு இந்த அஞ்சலில் யாம் எழுதியுள்ள விஞக்களையெல்லாம் எழுதி எழுதி அதற்குப் பதில் எழுதுங்கள்.

**<u>குறிப்பு:-</u>** அவசர அவசியமாக இந்த அஞ்சலுக்கு ஒரு பேஞ நகல், 2 + 2 = 4 (நான்கு) கார்பன் நகல்கள் அனுப்புங்கள். இன்றைய நிலையில் பூபதி, சோலை, ஐயப்பன், குருசாமி, நெல்லியான், முருகேசன், ... **<u>ஆகிய ஆறு பேருமே மிகச் சிறப்பாக அருளுலகில் வளர முடியும், வளரமுடியும், வளரமுடியும்; மிகப் பெரிய சாதனைகளைச் செய்ய முடியும், செய்ய முடியும், செய்ய முடியும். ஆனுல்,</u>** அவர்களுக்கு அருகிலிருந்து வழிகாட்ட, ஊக்குவிக்க, உற்சாகப் படுத்த, துணையாக இருக்க நெடுங்காலமாக யாருமே கிடைக்கவில்லை. ஆனுல், இவர்கள் அனைவருமே தாத்தாவால் தூய்மையானவர்கள்,

மெய்யானவர்கள், வாய்மையானவர்கள், உய்வுக்குரியவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஆவார்கள். இவர்களை வைத்துக் கொண்டுதான் கிழக்கு மண்டலத்தையே மற்ற மண்டலங்களுக்கு முன்னோடியாக ஆக்கிடல் வேண்டும். அதற்கு நீதான் பயன்பட வேண்டும். இதுதான் தாத்தாவின் அருளாணை. உன்னைப் பற்றிய பல பேருண்மைகள், உன்னுடைய சில சாதனைகளுக்குப் பிறகுதான் உன்னிடமும் உலகத்தாரிடமும் கூறப்படும். அதற்கு உன்னைத் தயாரித்துக் கொள். காலதாமதம் செய்யாதே.

4. அன்பு மகனே! இத்துடன் சுவர்களிலும், தரையிலும் வேகமாக எழுதுவதற்காக தகரத்திலும், அட்டையிலும் எழுத்துக்களை வெட்டிக் கொண்டு அவற்றை அப்படியே சாலைகளில் வைத்து வெண்மையான சுண்ணும்பு பூசினால் எழுத்துக்கள் அப்படியே பதியும். சுவர்களில் வைத்து கருப்பு வண்ணம் அல்லது காவி வண்ணம் அடித்தால் சிறப்பாக எழுத்துக்கள் பதியும். **இந்துவேதம் 3339** என்ற கருத்து விளக்கச் சுருக்க வாசகத்தை எப்படி விளம்பரம் செய்ய வேண்டும் என்பதற்காக எழுதி இத்துடன் இணைத்துள்ளோம். சுவரொட்டி அச்சிட்டால் அதிகச் செலவாகும். எனவே, இந்த சுவரில் எழுதும் முறையைக் கையாண்டு கிராமம் கிராமமாக, சிறிய சிறிய ஊர் ஊராக எழுதிப் பரப்புங்கள். அதன்பின் பெரிய நகரங்களிலும் எழுதுங்கள்.

5. இது பற்றி உடனடியாக இந்த அஞ்சலை நமது இ.ம.இ. அமைப்பினர் ஆறுபேருக்கும் காட்டுங்கள். எல்லோருடைய கருத்தையும் தெரிந்த பிறகு பசும்பொன்னூர் மாவட்ட இ.மு.க. தலைவர், அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் இராமானுசதாசு அவர்களிடம் உங்களின் முடிவைக் கூறி அவரைக் கலந்து செயல்படுங்கள். இந்த **இந்துவேதம் 3339 என்ற வாசகத்தைப் பரப்புவதுதான் இ.மு.க.வின் செயல்திட்டம். இது பற்றி மட்டும்** இ.மு.க. தலைவரோடு வாதியுங்கள். **சுற்று வட்டாரக் கோயில்களைப் புதுப்பிப்பது இ.ம.இ.யின் செயல்திட்டம்**.

இ.ம.இ.யின் செயலாளர் பா. பூபதியோடு மற்ற ஐவரையும் அழைத்து நீங்களும் கலந்து செயலாக்குங்கள். அதாவது மற்ற கோயில்களைப் புத்துயிர்ப்புச் செய்வதற்கு மிகக் குறுகிய கால அளவில் மூன்று நான்கு நாட்களுக்குள் பயிற்சியும், பூசைமொழியும் வழங்கப்படும். வாரத்தில் சில நாட்கள் அல்லது அன்றாடம் சில மணி நேரம் என்று செயல்படப் புறப்படுங்கள். கிராமம் கிராமமாகச் செல்வதற்கு நீங்கள் மற்ற ஆறு பேர் கலந்து ஒரு சில புதியவர்களையும் சேர்த்துக் கொண்டு செயல்பட முற்படுங்கள். ஆறு பேர்களும் ஒரே சமயத்தில் வர வேண்டியதில்லை. இருவர், மூவர் வந்தால் கூடப் போதும். **இந்தச் செயல்திட்டம் அவசரமானது, அவசியமானது.** உடன் விரிவான பதில் தேவை.

6. தங்களின் அஞ்சல் 21.10.92இல் எழுதப்பட்டது இன்று 29.10.92இல்தான் கிடைத்தது. கிடைத்தவுடன் பூசையில் வைக்கப்பட்டு பதில் எழுதப்படுகிறது. அன்பு மகனே! யாம் இதுவரை வேதநாயகத்தின் அருட்கோட்டம் எப்படி நடக்கிறது என்பது பற்றி செய்தியை அவரிடமிருந்தோ, அவர் துணைவியாரிடமிருந்தோ பெறவில்லை. இது குறித்து வருந்துகிறோம்.

**குறிப்பு:-** அவரிடமிருந்து அடிக்கடி அஞ்சல் தொடர்பு இல்லாததாலும்; முறையாக அருட்கோட்ட யாகம் முடிந்ததும் யாகச் சாம்பலை அனுப்பி மற்ற விவரங்களைத் தெரிவிக்காததால்தான்; பசும்பொன்னர் மாவட்டத்தில் உள்ள ஆறு பேரைப் பட்டியலிட்ட போது வேதநாயகத்தையும், அவர் துணைவியாரையும் அப்பட்டியலில் சேர்க்க வில்லை.

7. இந்த அஞ்சலை வேதநாயகத்திடமும், அவர் குடும்பத்தாரிடமும் படித்துக் காண்பியுங்கள். வேதநாயகம் போல் அருட்கணிப்பின் மூலம் பசும்பொன்னர் மாவட்டத்தில் அறிமுகமான நாலைந்து பேர்களிடமிருந்தும் எவ்விதமான அஞ்சல் தொடர்பும் இல்லை.

ஆனால், அவர்களுக்கெல்லாம் அருட்பட்டங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. எனவே, நமது இ.ம.இ. அலுவலகத்தில் (பூபதி இல்லத்தில்) பசும்பொன்னூர் மாவட்டத்திற்குள் யார் யார் அருட்பட்டங்கள் பெற்றிருக்கிறார்கள் என்ற முகவரிப் பட்டியலைத் தயார் செய்து வைத்து; நம்மவர்கள் அனைவருமே பொறுப்பாக அருட்பட்டம் பெற்றவர்களை எல்லாம் வாரம் ஒருமுறையாவது சந்தித்து இ.ம.இ.யை வளர்க்க முற்பட வேண்டும். அதற்கேற்ப இ.ம.இ. உறுப்பினர் கூட்டத்தை நடத்த வேண்டும். பூபதி அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்று விடுவதால், இ.ம.இ. அமைப்பாளராகிய தாங்கள்தான் முழுப் பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டும்.

8. இ.ம.இ. என்ற அமைப்புக்கு உட்பட்டதுதான் இ.மு.க. இ.ம.இ.தான் தனிமனிதர், குடும்பம், சமுதாயம் என்ற நிலைகளில் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும் அடையச் செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் இ.மு.க. அரசியல் முறையில் (ரீதியில்) செயல்பட முடியும். எனவே, நாம் மிகுதியாக இ.ம.இ.யை வளர்க்க முற்பட வேண்டும். இ.மு.க.வைப் பொறுத்தவரை மேடைப் பேச்சு, நமது புத்தகங்களை விற்றல், நமது அறிக்கைகளை வழங்குதல், பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் முதலியவைதான். இ.மு.க.வில் மாணவர்களையும், ஆசிரியர்களையும், அரசியல்வாதிகளையும் சேர்த்திடுங்கள்.

9. இ.மு.க.வின் பசும்பொன்னூர் மாவட்டத் தலைவர் திரு மு. இராமானுசதாசு அவர்கள் வீட்டில் வாரம் ஒருமுறை இ.மு.க. ஊழியர் கூட்டம் நடத்துங்கள். அதற்கு இ.ம.இ.யைச் சேர்ந்த அனைவரும் செல்லுங்கள். இதுவரை பசும்பொன்னூர் மாவட்டத்தில் இ.மு.க. உறுப்பினர் அட்டை பெற்றவர்களின் பட்டியலை முழுமையாகத் தயார் செய்து மாவட்டத் தலைவர் இல்லத்தில், மாவட்டத் தலைமையகத்தில் எல்லோரும் காண

வையுங்கள். அப்பொழுதுதான் அவரவர் வசதி வாய்ப்புகளுக்கேற்ப நமது இ.மு.க. உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ள முடியும்.

10. இ.ம.இ., இ.மு.க. உறுப்பினர் பட்டியலை உடனுக்குடன் தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

11. இத்துடன் '**அருளாணைச் செய்திகள்**' என்ற தலைப்பில் கி.பி. முதலாம் நூற்ருண்டில் இ.ம.இ., இ.மு.க., அ.வி.தி. முதலியவைகளைத் தோற்றுவித்த பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் (காலம் கி.மு.100 - கி.பி.150) தம் காலத்திய தமிழருக்கும், வருங்காலத் தமிழருக்கும் இந்து மத வழியில்தான் தமிழின மொழி நாட்டு உரிமைகளையும், பெருமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற பேருண்மையை விளக்கிச் சாதனமாக அருளிய '**நான்வேத வாசகங்கள்**' என்ற ஒருவரி வாசகத் தொகுப்பிலிருந்து அறுபத்தைந்து (65) வாசகங்களை மட்டும் தேர்ந்தெடுத்துப் பட்டியலிட்டுத் தங்களுக்கு அனுப்பியுள்ளோம். இதற்கும், பல நகல்கள் எடுத்து இ.ம.இ., இ.மு.க. நிர்வாகக் குழுவினருக்கும், சீ.மணி, D.M., கேசவன், துரை, செகதீசன் அவர்களுக்கும்;

1. வேம்படிதாளம் வெங்கடேசன், 2/68 மெயின் ரோடு, வேம்படிதாளம் அஞ்சல், சேலம் மாவட்டம் - 637504;
2. சித்தர் தேரையர் லோகநாதன், 9, பாசியம் ரெட்டி 1வது தெரு, ஓட்டேரி, சென்னை - 600012;
3. ஈரோடு பிரபாகரன், 92C, Peacock Mansion, E.V.N.Street, Mettur Road, Erode - 638002;
4. திரு பெ. சுப்பையா B.E., D.M./CRC, மயிலாடுதுறை - 609001;
5. இ.மு.க. அவைத் தலைவர் த. பொன்னுச்சாமி, 10, டிரசுடு பாக்கம் தெற்கு, மந்தைவெளி, சென்னை - 600028;

அவர்களுக்கும் அனுப்பி வையுங்கள். தலைமைப்பீடத்திற்கும் சில நகல்கள் அனுப்புங்கள். அழகப்பா பல்கலைக் கழக தமிழாசிரியர்களிடமும், காரைக்குடி கம்பர் விழா குழுவினரிடமும், தமிழார்வம் உடைய செட்டியார்களிடமும், மற்றவர்களிடமும் இந்த அருளாணைச் செய்தியின் நகலைக் கொடுத்து, நிதி திரட்டி, நன்கொடை பெற்று, இதனை அச்சிட முயலுங்கள்.

**<u>குறிப்பு</u>:-** நகல் எழுதுவதற்கு நம்மவர்கள் பலரின் உதவியை உரிமையோடு கேட்டுப் பெற்றிடுங்கள். **காலதாமதமின்றி <u>உடனுக்குடன்</u>** பல இடங்களுக்கும் நகல்கள் அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். சிறப்பாக இந்த நகல் எழுதும் பணிக்கு பள்ளி செல்லும் மாணவர்கள், படித்து முடித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருக்கும் மாணவர்கள், பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட பெரியவர்கள், தமிழ்மொழியில் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், தமிழ்மொழிப் பற்றுள்ள அரசியல்வாதிகள், ... முதலியவர்களை எல்லாம் தேடிச் சென்று கூச்சமின்றி அவர்களிடம் உதவி கேட்டுச் செயல்படுங்கள்.

விரிவான பதில் அடிக்கடி எழுதுக.

உங்களிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**

**ஞானத்தந்தை,**

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.**

**29-10-92.**

இணைப்பு: 1

இ.மு.க. I.M.K. {கொடி படம்}

# இந்து முன்னேற்றக் கழகம்

## இந்து மத நெறியைப் போற்றுவோம்!
## வேற்று மத வெறியை மாற்றுவோம்!

**இந்துவேதம்: 3339**

INDHU MUNNETRA KAZHAGAM

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**இந்த அஞ்சலில் குறிப்பிட்டுள்ள இணைப்பு 2 என்பது நான்வேத வாசகங்கள் என்ற தலைப்பில் உள்ள ஒருவரி வாசகங்கள். இது ஏற்கனவே இந்த ஆண்டு சித்திரை மாத வெளியீட்டில் வெளியாகி உள்ளதால் இங்கே தரப்பட வில்லை.**

ஓம் நமசிவாய!

<u>அறிவிக்கை எண்: 12,222</u>.

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்**
**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**
[THE DIVINE SERVICE DEVELOPMENT SCHEME]

**இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்களின்**

# <u>57வது பிறந்த நாள் அருட்செய்தி</u>

(வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53.)

1. **"... புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்"**

வாழும் பதினேரு பேர்களுக்கும் உரியதாக <u>எங்கும் என்றென்றும் இருக்கும்படியாக</u> அதாவது, நிலையாக நிலைத்துப் பரவிப் பயன்படும்படியாக அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் அருளியுள்ள <u>'இருக்கு வேதம்'</u> எல்லா மக்களுக்கும் தெரிவிக்கப்படல் வேண்டும். ஓரளவு எழுத்தறிவும், பத்தியுணர்வும் உள்ளவர்கள் இருக்கு வேதம் மந்தர, மந்திர, மந்திற, மாந்தர, மாந்தரீக ஒலிகளை அன்றாடம் அகத்திலும், இல்லத்திலும், ஆலயத்திலும், அலுவலிடங்களிலும் ஓதி எங்கும் அருட்பயன் விளையும்படி செய்ய வேண்டும். அடுத்து;

2. **"... வல் அசுரராகி, முனிவராய், தேவராய்"**

வாழ்பவர்க்காக, அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் அருளியுள்ள 'அசுர வேதம்', 'யாம வேதம் (சாம வேதம்)', 'அதர்வான வேதம்' என்ற மூன்று வேதங்களையும்; உலகியல் கடந்து, நடந்து,

செயல்பட விரும்புவோர் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெறுவதற்காக; ஆங்காங்கே

**'சித்தர் கருவூரார் வாரவழிபாட்டு மன்றம்',**

**'சித்தர் கருவூரார் அருட்கோட்டம்',**

**'சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்' ...** முதலியவை தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

3. இதேபோல், இந்து வேதம் வளர்ப்பதற்காக; ஆலயங்கள் தோறும், பதினெண்சித்தர்கள் அருளியுள்ள 'நான்கு வேதங்களும்' பயிற்றுவிப்பதற்குரிய 'இந்து வேத பாடசாலைகள்' தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

4. இந்து வேதத்தின் முன்னூற்றுத் தொண்ணூற்ரூறு நூல்களும்; இந்து மதத்தின் முப்பத்தாறு நூல்களும் ஆக மொத்தம் இந்துக்களுக்காக அருளப்பட்டுள்ள (432) நானூற்று முப்பத்திரண்டு நூல்களையும் முறையாகச் செயலாக்கச் *சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம்,... பரமாச்சாரியார், சிவாச்சாரியார், ஈசுவராச்சாரியார், சங்கராச்சாரியார், ... அரியவாள், கூரியவாள், சீரியவாள், பெரியவாள், நேரியவாள், வீரியவாள்... ஏமகோடிப் பீடம், காமகோடிப் பீடம், சோமகோடிப் பீடம், வாமகோடிப் பீடம், ...* முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டங்களுக்கும் உரியவர்களைத் தயாரிக்க வேண்டும். இதற்காக அருளியலாகவும், பொருளியலாகவும் தொண்டாற்ற முன்வரக் கூடியவர்கள் தொடர்பு கொண்டிட்டால் இந்திய நாடு முழுவதும் பரவலாக 'குருகுலம்', 'தருகுலம்', 'திருகுலம்', 'கருகுலம்' ஆகிய நான்கையும் உருவாக்கிட இயலும்.

5. இந்துக் கோயில்களில், தேவைக்கேற்ப அந்தந்தக் கோயிலில் பணிபுரியும் குரு, குருக்கள், குருமார், பூசாறி எனும் நால்வரில் யாராவது சிலர், அல்லது அனைவரும் 'அருட்பட்டங்கள்' பெற்ற 'அருட்கலைஞர்களாக', 'அருளாளர்களாக'த் தயாரிக்கப்படல் வேண்டும்.

அல்லது அருட்பட்டம் பெற்றவர்கள் ஒவ்வொரு ஆலயத்திலும் தங்கிச் செயல்படும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான், இந்துக் கோயில்களில் மந்திரித்துக் கொள்ளலாமென்ற நம்பிக்கையும், அதன் மூலம் இந்துக்கள் மாற்று மதக் கோயில்களுக்குச் சென்று மந்திரித்துக் கொள்ளும் பழக்கம் தடுக்கப்படலும் உருவாகும்.

- "இந்து வேதம் வளர்ப்போம்"
- "இந்துக் கோயில்களைப் பயன்படுத்துவோம்"
- "இந்து மத சரித்தர, சரித்திர, சரித்திறங்களை கற்போம்"
- "இந்து மத சாத்தர, சாத்திர, சாத்திறங்களை பயிலுவோம்"
- "இந்து மத தோத்தர, தோத்திர, தோத்திறங்கள் ஓதுவோம்"
- "இந்து மத அருளாளர்களின் போதனைகளையும், சாதனைகளையும் உணருவோம், உணர்த்துவோம்"
- "இந்து மத ஒற்றுமை உருவாக்குவோம்"
- "இந்தியாவின் நல வள வலிமை காப்போம்"

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**இந்து முன்னேற்றக் கழகம்**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. இரு வேறு சித்தரடியான்களின் கையெழுத்தில் இருந்தது. கையெழுத்திற்கு உரியவர்கள் யார் என்று தெரியவில்லை.//**

ஓம் குருவே துணே!

20-6-1992,
சென்னே - 53.

# அகத்தியர் அருட்கோட்டத்திற்கு வழங்கப்படும் சிறப்புக்கள்

அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் மு. இராமானுசதாசு அவர்களுக்குத் தலைமைப்பீடத்திலிருந்து விடுக்கப்படும் மடல்.

1) அருளாட்சிப் பணியில் ஈடுபட்டிருக்கும் தங்களுக்கு அருளுலகத்தவரும், பொருளுலகத்தவரும் உரிய பாதுகாப்பு வழங்குவார்கள், கவலே வேண்டாம். தாங்கள் முழுமையான அளவு தனிப்பட்ட அடியார் என்ற முறையில் முழுமையாகத் தயாராகி எத்தனேயோ ஆண்டுகள் ஆகின்றன. ஆனுல், பறக்கின்ற பட்டத்தை இழுத்துப் பிடித்து அதன் கயிற்றை தரையிலுள்ள முள் செடியில் கட்டிவிட்டால் அந்தப் பட்டம் மேலே பறந்து போக முடியாமல் காற்றில் படபடவென்று அடித்தபடியே இருக்கும். ஒன்று, பட்டம் நூலே அறுத்துக் கொண்டு வேறு எங்காவது பறக்க வேண்டும். அல்லது பட்டம் பழுதடைய வேண்டும். பிறகு கீழே வர நேரிடும். இதுதான் சோதனே. இதனே யாரோ சிலர் வெல்லுவார்கள். அல்லது நல்லவர்கள் கையில் பட்டம் பறந்து கொண்டிருந்தால் பட்டம் அவ்வப்போது இறக்கி கீழே பாதுகாப்பாக வைத்திருந்து அடிக்கடி பறக்க விடப்பட்டு அழகு பார்க்கப்படும்.

2) தாங்கள் முழுநேரமாகச் செயல்படுகிறீர்கள். தங்களின் குருகாணிக்கை, பூசை, தொண்டு அனேத்தும் உங்கள் சாதனேகள்; உங்களுக்கே உரியவை, உங்களுக்குப் போதுமானவை. நீங்களே

தியாகம் செய்து உங்கள் அருட்செல்வங்களை, பாதுகாப்புகளை, மருந்து, விருந்துகளை குடும்பத்தாருக்கும், பிறர்க்கும் தியாகம் செய்கிறீர்கள். இது பாராட்டுதற்குரியது. ஆனால், எந்த நேரத்திலும் எதையும் எதிர்பார்க்கக் கூடிய சிக்கலான நிலை.

3) உங்கள் மீது எந்தவிதமான இயலாமை நிலையும் கூறப்பட வில்லை. நீங்கள் முயற்சித்தால் உங்களைச் சுற்றி உள்ளவர்களை வைத்துக் கொண்டு புதியவர்கள் பலரை இ.மு.க.வில் சேர்க்கலாம். அருட்கணிப்புக்கு வருகிறவர்களை இ.ம.இ.யில் சேர்க்கலாம். எனவே, இ.ம.இ. வேறு, இ.மு.க. வேறு என்பதைப் புரிந்து செயல்படுக. திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் முக்காலக் கணிச்சி இராசேசுவரியை அழைத்து அ.வி.தி. பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளவும். உங்கள் வீட்டு யாகத்தின் கிழமையை எல்லோரும் வருவதற்கு வசதியுள்ள நாளை கலந்து ஆலோசித்துக் கொண்டு மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

4) யாகத்தை ஒட்டி அ.வி.தி. கொடியுள்ள அறையின் மேல் இயன்ற வரை கம்பி அல்லது Pile Post நட்டு இரண்டு மெய்ஞ்ஞானக் கொடி கட்டிடத்தின் இட, வலப் பக்கங்களிலும் பறக்க விடவும். இரண்டிற்கும் இடையில் அமர்ந்து மாலை, நள்ளிரவு, காலை நேரங்களில் தவம் செய்து பயிற்சி செய்யுங்கள்.

உங்களோடு தவத்தில் பயிற்சி பெறுபவர்கள் ஓகாசன, யோகாசன, குண்டலினி கலைகளுக்குரிய பயிற்சிகளைச் சிறுகச் சிறுகத் தாங்களாகவே பெறுவார்கள். குறைந்தது 18 நாட்கள் 2½ மணி நேரம் வரை தவத்தில் உட்காருபவர்கள் குல தெய்வம், வீட்டு தெய்வம், விருப்ப தெய்வம் போன்றவற்றை வேண்டிக் கொள்ளலாம். அப்போதுதான் எல்லா தெய்வங்களும் கட்டுக்களிலிருந்து விடுபடும்.

**<u>குறிப்பு:-</u>** இதேபோல் பரிகாரம் செய்ய அதிகப் பணவசதி இல்லாதவர்கள் 48 முறை அவரவர்களுக்காக தவத்தில் ஆழ்ந்து பூசை செய்தால் பாதிப்புக்கள் குறையும். அவர்களால் இயன்ற குருகாணிக்கை அனுப்பி முடிகயிறு, தாயத்து, சக்கரம் ஏதேனும் பெற்றுப் பரிகாரம் செய்து கொள்ளலாம். இந்த இரண்டு சிறப்புக்களும் அகத்தியர் அருட்கோட்டத்திற்கும், அகத்தியர் சன்னிதானத்திற்கும் வழங்கப்படுகிறது. இதைப் புரிந்து செயல்படுக.

... ... ... *[அஞ்சல் முழுமையாகக் கிடைக்கவில்லை.]*

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

**<u>??? !!! ??? !!!</u>**

**“இமயம் முதல் குமரி வரை உள்ள பல்வேறு மாநிலங்களில் எந்த மாநிலத்திலுமே ஆட்சிமொழியாகவோ அல்லது பேச்சு மொழியாகவோ இல்லாத ஒரு மொழியான சமசுக்கிருத மொழி எப்படி? ஏன்? எதற்காக? எவ்வாறு? எப்பொழுதிருந்து? இந்து மதத்தின் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டது? இந்து மதத்தின் பூசைமொழியாக ஆக்கப்பட்டது? இந்து மதத்தின் சடங்கியல் மொழியாக ஆக்கப்பட்டது? இந்து மதத்தின் வேத மொழியாக ஆக்கப்பட்டது? ....** என்ற வினாக்களைக் கடந்த இரண்டாயிரம் (2000) ஆண்டுகளாக ஆர்ப்பரித்துக் கொந்தளிக்கும் கடலலை போல் தொடர்ந்து எழுப்பி வந்தும் கூட எவருடைய காதிலும் இக்கேள்விகள் விழவில்லை, விழவில்லை, விழவில்லை. அதாவது, இவை பற்றி எவருமே சிந்திக்கத் தயாராகவில்லை! எவருமே சிந்திக்கத் தயாராகவில்லை! எவருமே சிந்திக்கத் தயாராகவில்லை!”

# குருதேவர் பிறந்தநாள் பற்றிய குறிப்பு

"... ... எந்தை (என் தந்தை) யாம், மூன்று மாதக் குழந்தையாக பால்குடிக்கும் சிசுவாக இருந்தபோதே எம்மை எதிரிகள் அழித்து விடக் கூடாது என்பதற்காக தாய்ப்பாலோடு நவநஞ்சையும் கலந்து ஊட்டினுர். அதுமட்டுமல்ல, நவநஞ்சை உண்டு யாம் தப்பிப் பிழைத்ததால்தான்; யாம்தான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் பெற்றுள்ளோம் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். அதனுல், எம்மைக் கட்டாயமாகப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக எமது பிறந்த நேரம், கிழமை, நாள்(தேதி) முதலியவைகளேக் கூட (5) ஐந்து நாள் இடைவெளி இருக்கும்படிக் கூறிச் சென்றிட்டார். அதாவது, அக்டோபர் மாதம் 6 முதல் 10 வரை எமது பிறந்த நாள் என்று கூறிச் சென்றிட்டார். 6-10-1936 என்பது எம்முடைய கல்விக் குறிப்பேடுகளில் காணப்படுகிறது. 10-10-1936 என்பது அருளுலகக் குறிப்பேடுகளில் காணப்படுகிறது. இது மட்டுமின்றி அவர் தமது உயிரை தனது உடலிலிருந்து வெளியேற்றிக் கொள்ளும் போது கூட; 'மகனே, உனக்கு மிகுந்த ஆற்றல்கள் உண்டு, அவற்றைப் பயன்படுத்தி உன்னுடைய பிறந்த நாளேப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு எந்த உண்மையையும் கண்டுபிடிக்க வேண்டாம். உன்னுடைய பிறந்தநாள் பற்றிய உண்மையில்தான் உன்னுடைய பாதுகாப்புகள் அனேத்தும் இருக்கின்றன, எச்சரிக்கை!' என்று கூறிச் சென்றதால்தான் யாம் இன்றுவரை அவருடைய ஆணேயை மீருமல் வாழுகிருேம். ..."

**//25-08-1992இல் எழுதப்பட்ட அஞ்சலில் குருதேவர் வழங்கும் குறிப்பு//**








**11வது பதினெண்சித்தர் பீடாதிபதி** **12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

**"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."**

**- குருபாரம்பரிய வாசகம்.**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the
Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

**காணிக்கை: ரூ.10/-**